Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2, COURT, SATTUR.

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | Case No. CC.114/2022 |
| Deposition of witness for Prosecution<br>Defence<br>Court | PW.1 |
| Name: | பாக்கியலெட்சுமி |
| Father's/Husband Name: | |
| Village: | |
| Taluk: | |
| Caste: | |
| Calling: | |
| Religion: | |
| Age: | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969(Central Act 44 of 1969) on the day of 6.10.2022 | |

**முதல் விசாரணை** : நேரம் :

நான் சுந்தர குடும்பன் பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 21.3.2021ம் தேதி காலை 8.00 மணியளவில் நான் வீட்டின் வெளியே உட்கார்திருந்த போது சண்முகராணி, மந்திர மூர்த்தி, நந்தினி ஆகியோர்கள் வந்தார்கள். சண்முகராணியும், நந்தினியும் என்னை தலைமுடியை பிடித்து தர தர என்று இழுத்து தேவிடியா மகளே என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார்கள். மந்திரமூர்த்தி அரிவாளை வைத்து வலது தோள்பட்டையில் வெட்டினார். தேவிடியா என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார். தங்கபாண்டி மனைவி தங்கவேலம்மாள் வந்து அவர்களை சத்தம் போட்டார்கள். அவர்கள் அரிவாளை எடுத்து கொண்டு அங்கிருந்து சென்றுவிட்டார்கள். அதன் பின்னர் சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு மினி ஆட்டோ மூலமாக சென்றேன். சம்பவம்தொடர்பாக நடவடிக்கை எடுக்க கோரி சாத்தூர் அரசு மருத்துவமனையில் இருந்த போலீசாரிடம்

புகார் வாக்குமூலம் கொடுததேன். அந்தபுகார் வாக்குமூலம் என்னிடம் காட்டப்படும ஆவணம்தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். (**அந்த புகார் வாக்குமூலம் அ.சா.1/அ.சா–ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).சம்பவம் தொடர்பாக வேறு எதுவும் ஞாபகம் இல்லை. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு எழுத, படிக்க தெரியாது. கையெழுத்து மட்டும்தான் செய்வேன். அரசு மருத்துவமனையில் வைத்து சார்பு ஆயவாளர் மற்றும் போலீசார் என்னிடம் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள், அதில் நான் கையொப்பம் செய்தேன். புகார் வாக்குமூலத்தை போலீசார் எழுதினார். போலீசார் விசாரணையில் சண்முகராணியும், நந்தினியும் கீழே இழுத்துபோட்டு அசிங்கமாக பேசி அடித்த விபரத்தை கூறியுள்ளேன். போலீசார் விசாரணையில் மந்திரமூர்த்தி அரிவாளை கையில் கொண்டு போய்விட்டதாக கூறியுள்ளேன். மருத்துவமனைக்கு காவல் நிலையத்தை கடந்துதான் சென்றேன், அப்போது காவல் நிலையத்திற்கு சென்றேன் அவர்கள் என்னை மருத்துவமனைக்கு போக சொன்னார்கள்.

2. அரசு மருத்துவமனைக்கு நானும், எனது மகளும் தான் சென்றோம். சண்டை நடந்த போது தங்கவேலம்மாள் தவிர வேறு யாரும் இல்லை. மந்திரமூர்த்திக்கும், எங்களுக்கும் ஏழு வருடங்களாக இடப்பிரச்சினை உள்ளது. ராமலெட்சுமி எனக்கு மாமியார் உறவு முறை வேண்டும். ராமலெட்சுமியின் மகன் தங்கமுத்து போலீசாக வேலை செய்கிறார் என்றால் சரிதான். சம்பவம் சுமார் 1 மணி நேரம் நடைபெற்றது. என் மீதும், என் கணவர் மீதும் எதிரி மந்திரமூர்த்தி புகார் கொடுத்தன் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. எங்கள் மீது வழக்குகள் இருப்பதை மறைத்துபொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியலல. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. இடப்பிர்ச்சினையை மனதில் வைத்து கொண்டு பொய் புகார்கொடுதது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் என்னை அசிங்கமாக பேசவோ அடிதது காயத்தை ஏற்படுத்தவோ இல்லை என்றால் சரியல்ல.

3. நான் சொன்ன நாள் மற்றும் நேரத்தில்புகார் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. எதிரி என்னை வெட்ட பயன்படுததிய ஒரு முழம் நீளம் இருக்கும். எதிரி என்னை வெட்ட வநத போது எனது மகள் கனகா தடுத்தார். பின்னர் பக்கத்தில சென்று தங்கவேலம்மாளை அழைத்து வந்து விலக்கி விட்டார். போலீசார் விசாரணையில் மேற்படி சங்கதிகளை கூறியுள்ளேன்.